**ஜனாதிபதித் தேர்தல் 2019 – ஊடக அறிக்கை, ஒக்டோபர் 20, 2019**

**கொழும்பு, இலங்கை. ஒக்டோபர் 20, 2019, 12 மணித்தியாலங்கள் - மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தேர்தல் தொகுதி. புதிய ஜனநாயக முன்னணி ஆதரவாளர்கள் மீதான தாக்குதல்**

கடந்த இரவு CMEV இற்கு அறிவிக்கப்பட்டவாறு, ஒக்டோபர் 19, 2019 அன்று, புதிய ஜனநாயக முன்னணியின் இரு ஆதரவாளர்களை இலங்கை பொதுஜனப் பெரமுனைவின் ஓர் ஆதரவாளர் தாக்கியுள்ளார். CMEV இற்கு மேலும் அறிவிக்கப்பட்ட வகையில், மேற்குறித்த பொதுஜனப் பெரமுனவின் ஆதரவாளர் புதிய ஜனநாயக முன்னணியின் ஆதரவாளர்கள் இருவரையும் தன் வசம் இருந்த ஓர் இலகுரகத் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தியதாகவும் CMEV இற்கு அறியத்தரப்பட்டது.

ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதித் தேர்தலில் ஒரு இலகுரகத் துப்பாக்கி உபயோகிக்கப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட ஒரு முதலாவது சம்பவமாக இது அமைகின்றது.

புதிய ஜனநாயக முன்னணியின் இரண்டு ஆதரவாளர்களான, எம்.எஸ். நிஹால்சிங்கே மற்றும் நவரத்ன பண்டார ஆகியோர் வாதுவை மயானத்தை கடந்து செல்லும் போது அவர்கள் இலங்கை பொதுஜனப் பெரமுனவின ஆதரவாளர் சிசிரர மென்டிஸ் என்பவரால் ஒரு இலகுரகத் துப்பாக்கி காண்பிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டனர். CMEV இற்கு அறிவிக்கப்பட்டவாறு, குறித்த நபர் சம்பவ இடத்திற்கு CAA 1544 எனும் இலக்கத் தகடு கொண்ட ஒரு பஜரோ வாகனத்தில் வந்துள்ளார். CMEV இற்கு தாக்குதலுக்கு உள்ளான நிஹால்சிங்கேயினால் மேலும் தெரிவிக்கப்பட்டவாறு, சிசிர மென்டிஸ் என்பவர், தாக்குதல் நடைபெற்ற சமயத்தில் மதுபோதையில் இருந்துள்ளார்.

மேலும், தாக்குதலுக்குள்ளான எம்.எஸ். நிஹால்சிங்க, வாதுவை பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பாக CIB 227/153 எனும் இலக்கத்தின் கீழ் முறைப்பாடொன்றைப் பதிந்துள்ளார். தேர்தலுடன் இணைந்ததாக இச்சம்பவம் இருப்பதற்கு முடிவான சான்றுகள் இருந்த போதிலும் கூட ஒரு தேர்தல் வன்முறையாக இச்சம்பவம் அறிவிக்கப்படாமை காரணமாக சந்தேகம் எழுவதற்கான ஒரு சாத்தியம் அங்கேயுள்ளது.

இந்தச் சம்பவம் ஓர் இலகுரகத் துப்பாக்கியை உபயோகித்து அச்சுறுத்தல் மேற்கொண்டமை தொடர்பில் சம்பந்தப்படுகின்ற போதிலும் கூட, குறித்த சந்தேக நபர் எந்தச் சிரமுமின்றி சிறிது நேரத்திலேயே பிணையில் விடப்பட்டமை குறித்தும், CMEV இற்கு மேலும் அறியத் தரப்பட்டது.

CMEV இற்கு ஒரு வாக்குமூலத்தைக் கொடுக்கும் வேளையில், தாக்குதலுக்காக குற்றம் சாட்டப்பட்ட சிசிர மெனடிஸ் பொதுஜனப் பெரமுனவின் ஒரு தீவிர ஆதரவாளர் என்பதையும் மற்றும் இலகுரகத் துப்பாக்கியின் சம்பந்தப்படுதல் பற்றி தான் பொலிஸாரிற்கு வழங்கிய வாக்குமூலத்தில தெளிவாகக் குறிப்பிட்டதாகவும் நிஹால்சிங்கே குறிப்பிட்டார். எனினும், இது தொடர்பில் மேலும் விடயத்தை ஆராய்கையில், நிஹால்சிங்கே பொலிசாருக்கு கொடுத்த அவரது வாக்குமூலத்தில் இலகுரகத் துப்பாக்கி சம்பந்தப்படுதல் பற்றி எதனையும் குறிப்பிடவில்லை என வாதுவைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து CMEV அறிந்து கொண்டது.

இலங்கையில் தேர்தல் தொடர்பான வன்முறைகளில் ஒரு குறைவு அல்லது வீழ்ச்சி காணப்பிக்கப் படக்கூடிய ஒரு சூழ்நிலையில் பல்வேறு இடங்களில் வெவ்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வன்முறை மற்றும் தாக்குதல் என்பவற்றின் தொடர்ச்சி தனிப்பட்ட சம்பவங்களாக கையாளப்படுதல் கூடாது என்பது CMEV இன் கருத்தாகும்.

சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான ஒரு தேர்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொலிஸ் என்பவற்றின் கடுமையான முயற்சிகளுக்கு தங்களது முழுமையான ஆதரவை நல்குவதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அதே போன்று பிரதேச ரீதியிலான அரசியல்வாதிகளையும் வலியுறுத்துவதற்கு CMEV விரும்புகிறது.